## தலைப்பு 101 - புத்தசாசன அமைச்சு

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புத்தசாசன அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 19 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புத்தசாசன அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு புத்தசாசன அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) புத்தசாசன அமைச்சினால் முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என அறிவிக்க முடியாதிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 கணக்குகளை சமர்ப்பித்தல்

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிச் செயலாற்றல் கூற்றில் பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சினால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் தமிழ் பிரதி சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய திகதியில் நிதிக்கூற்றுக்களின் தொகுதி மும்மொழிகளிலும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | தமிழ் மொழியிலான மொழிபெயர்ப்புகளுக்காக வெளிவாரி தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் தாமதமின்றி சமர்ப்பிக்கின்றேன். |

## 1.6.2 பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின் முன்னைய வருடங்களின் ஒப்பீட்டு தொகைகள் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சின் நிஜதிக்கூற்றுக்களின் முன்னைய ஆண்டுகளின் ஒப்பீட்டு தொகைகள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களின் ஒப்பீட்டுத் தன்மைக்காக முன்னைய ஆண்டின் ஒப்பீட்டு தொகைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. | அரச கணக்குகள் திணைக்களத்தினால் 2018 நிதியாண்டிற்காக புதிய மாதிரிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள துடன், அதற்கமைய நடப்பாண்டின் பெறுமதிகள் மாத்திரம் அடிப்படையாக கொள்ளப்பட்டு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டன. |

## 1.6.3 முற்பணக் கணக்கு மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பணி நீக்கத்திற்கு உட்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 32,155 தொகையினை அறவிடுவதற்கு தவறியிருந்தது. | அறவிடும் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். | பணி நீக்கத்திற்கு உட்பட்ட உத்தியோகத்தரின் நிலுவை கடன் மீதிகளை தீர்க்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) பிரசவ விடுமுறை பெற்றுள்ள உத்தியோகத்தர் ஒருவரின் சம்பளமற்ற விடுமுறை பெற்றிருந்த 3 மாதங்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 10,757 தொகையான கடன் தவணை அறவிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | சம்பளமற்ற விடுமுறை பெற்றிருந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை கடன் தவணைகள் மற்றும் வட்டியை தீர்க்குமாறு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

## 1.6.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| அவதானிப்புகள் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | பெறுமதி ரூபா | இணக்கமின்மைகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 571 | 5,708,192 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 47,104,906 கூட்டுத்தொகையான வைப்பு மீதிகளில் 2 வருடங்களை விஞ்சிய ரூபா 5,708,192 கூட்டுத்தொகையான மீதிகளுக்காக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 2 வருடங்களை விஞ்சிய வைப்பு மீதிகள் தொடர்பில் நி.பி. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உரி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2 மீண்டெழும் செலவின விடயங்களுக்கும் 4 மூலதன செலவின விடயங்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த நிதியேற்பாட்டின் 11 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் ரூபா 121.23 மில்லியனான நிதியேற்பாடுகள் எஞ்சியிருந்தன. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அவ்வாறான நிதியேற்பாடுகள் எஞ்சியுள்ளதுடன், நாட்டில் நிலவிய அரசின் மாற்றம், மதியுரை நிறுவனங்களை தெரிவு செய்வதிலான தாமதம், தகைமைவாய்ந்த நிபுணர்களை பெற்றுக்கொள்ளல் தாமதமடைதல் போன்ற பல்வேறு காரணங்களின் அடிப்படையில் எதிர்பார்க்கப்பட்டவாறு செயற்திட்டங்களை அமுல்படுத்தாமையால் நிதியேற்பாடுகள் |

எஞ்சியுள்ளன.

## 2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| 5 செலவின விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களில் ரூபா 28.35 மில்லியன் கூட்டுத்தொகையான பொறுப்புகள் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த பொறுப்புகள் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புகள் பதிவேடு நாளதுவரையாக பேணப்பட வேண்டியமை. | 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பொறுப்புகளின் விபரங்கள் தவறுதலாக பொறுப்புகள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| ‘‘ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030’’ இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களாலும், செயற்பட வேண்டியதாக உள்ளதுடன், மீளாய்வாண்டிற்கு உரியதாக அமைச்சினால் தமது விடயப்பரப்பின் கீழான பணிகளுடன் தொடர்புடைய நிலைபேறான நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடையக்கூடிய அடைவுகளும், இலக்குகளை அடைவதனை அளவிடக்கூடிய குறிகாட்டிகள் மற்றும் அடைவுகள் இனங்காணுவதற்கு 2018 ஆம் ஆண்டினுள் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்குரிய நோக்கங்களை இனங்கண்டு அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான இலக்குகளை நிறுவி அந்த இலக்குகளை அடைவதனை அளவிடுவதற்காக குறிகாட்டிகள் தயாரிக்கப்பட வேண்டியமை. | இது வயிலும், 2020 கால அட்டவணைக்குரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டுள்ளதுடன், 2030 கால அட்டவணை தயாரிக்கப்பட்டவாறு உள்ளது. |

**4.** **மனிதவள முகாமைத்துவம்**

---------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரைகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியளவில் 75 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன், அந்த வெற்றிடங்களை நிரப்புவதறகு அல்லது தேவையான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்தியமைத்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதறகு அல்லது திருத்தியமைத்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரச நிர்வாக அமைச்சிற்கு அவ்வப்போது கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள போதிலும், இது வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |